அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6

பத்தாம் வகுப்பு – பொதுத் தேர்வு – மார்ச் 2018

தமிழ் இரண்டாம் தாள் – விடைக்குறிப்புகள்

மொத்த மதிப்பெண்கள் 100

<u>விடைத்தாள் மதிப்பிடும் போது கீழ்க்குறிப்பிட்டுள்ள வழிமுறைகளைத் தவறாது பின்பற்றுதல் வேண்டும்.</u>

1. நீலம் மற்றும் கருப்பு மையினால் எழுதப்பட்டுள்ள விடைகள் மட்டுமே மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

2. விடைகள் சொந்த நடையில் தெளிவாக அமைந்து, கருத்துப்பிழை, தொடர் பிழை, சொற்பிழை, எழுத்துப்பிழை, ஒற்றுப்பிழை, இலக்கணப்பிழை இல்லாதிருப்பின் முழு மதிப்பெண் வழங்குதல் வேண்டும்.

3. எழுத்துப்பிழை, ஒற்றுப் பிழை, இலக்கணப்பிழை ஒவ்வொன்றிற்கும் கால் மதிப்பெண் வீதம் குறைத்து, அவ்வாறு குறைக்கும் மதிப்பெண் எக்காரணம் கொண்டும், வினாவிற்குரிய மதிப்பெண்ணில் நான்கில் ஒரு பங்குக்கு மேல் மிகாமல் இருத்தல் வேண்டும்.

4. கவிதை எழுதும் பகுதியில் சந்தம், தூய தமிழ்ச்சொற்கள் இருந்தால் மட்டும் முழு மதிப்பெண் வழங்கலாம்.

5. கட்டுரையில் மொழிநடை இன்றியமையாதது.

6. விடைகள் பிறமொழிக் கலப்பின்றி (சிறுகதை நீங்கலாக) எழுதப்பட்டிருக்கவேண்டும்.

7. தவறான விடைகளைக் (X) குறியிட்டும், தொடர்பிழைகளை அடிக்கோடிட்டும், ஒற்றுப்பிழைகளை (^) குறியிட்டுக் காட்டியும் விதிப்படி அவற்றிற்குரிய மதிப்பெண்களைக் குறைத்தல் வேண்டும்.

8. மதிப்பெண் வழங்கப்படுகின்ற ஒவ்வொரு சரியான கருத்திற்கும் தனித்தனியே (✓) குறியிடுதல் வேண்டும்.

9. மிகை விடையிருப்பின் 'மிகை' என்று குறிப்பிட்டு அடித்தல் வேண்டும்.

10. ஒரே விடை மீண்டும் எழுதப்பட்டிருப்பின் 'மீண்டும்' என்று குறிப்பிட்டு அடித்தல் வேண்டும்.

மதிப்பெண்கள்: 20

பிரிவு –I

| பகுதி – 1 | | | |
|---|---|---|---|
| உரிய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் சேர்த்து எழுதுக | | | 5 X 1 = 5 |
| 1. | அ) பஃறீது | 1 | |
| 2. | ஆ) பொது மொழி | 1 | |
| 3. | ஆ) ஈறுபோதல், இனமிகல் | 1 | |
| 4. | இ) கிளி, மயில் | 1 | |
| 5. | ஆ) பன்னிரண்டு | 1 | |

| பகுதி – 2 | | | |
|---|---|---|---|
| கோடிட்ட இடத்தை நிரப்புக | | | 5 X 1 = 5 |
| 6 | இரட்டைக்கிளவி | 1 | |
| 7. | நிகர் / நிகர | 1 | |
| 8. | ஒரு பொருட் பன்மொழி | 1 | |
| 9. | செப்பலோசை | 1 | |
| 10. | இரட்டுறமொழிதல்/ சிலேடை | 1 | |

| பகுதி – 3 | | | |
|---|---|---|---|
| சுருக்கமாக விடையளி | | | 10 X 1 = 10 |
| 11. | வல்லினம் மிகும் இடம் – சரியாக இருப்பின் மதிப்பெண் வழங்குக. (ஒன்று மட்டும்) | 1 | |
| 12. | அன்பரசன் திருக்குறளைக் **<u>கற்பித்தான்.</u>** | 1 | |
| 13. | குருளை,<br>கன்று | ½<br>½ | |
| 14. | இயல், இசை, நாடகம் | 1 | |
| 15. | ஒளி ஒலிப்படக் கருவி, திரையரங்குகளில் திரைப்படம் காட்டப் பயன்படுகின்றது. | 1 | |
| 16. | மேடைப் பேச்சு மிகுந்த பயனைத் தரவல்லது. | 1 | |
| 17. | உடல் / உடம்பு<br>உண்மை | ½<br>½ | |
| 18. | நான் இந்தக் கல்லூரியின் **முன்னாள்/ மேனாள்/ பழைய** மாணவன். | 1 | |
| 19. | "ஆம், போகவேண்டும்" என்றார். | 1 | |
| 20. | நீண்ட காலத்திற்குரியது. | 1 | |

பிரிவு –II மதிப்பெண்கள்:10

| எவையேனும் ஐந்தனுக்கு மட்டும். | | | 5 X 2 = 10 |
|---|---|---|---|
| 21. | சொல்லுக்கு முதல், இடை, கடை ஆகிய மூவிடங்களில் வரும். | 2 | 2 |
| 22. | ஓர் எழுத்து, தனியாகவோ பல எழுத்துகள் தொடர்ந்தோ பொருள் தருவது சொல் எனப்படும். | 2 | 2 |
| 23. | மண்ணாசை காரணமாகப் பகைவர் நாட்டைக் கைப்பற்றக் கருதி வஞ்சிப்பூவைச் சூடிப் போருக்குச் செல்வது வஞ்சித்திணை.<br>வெற்றி பெற்ற மன்னன் வாகைப்பூச் சூடி மகிழ்வது வாகைத்திணை | 1<br>1 | 2 |
| 24. | செம்மை, சிறுமை, சேய்மை, நன்மை, (அல்லது பொருத்தமான நான்கு விடை இருப்பின் மதிப்பெண் வழங்குக) | 2 | 2 |
| 25. | 1. ஏழு<br>2. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, கைக்கிளை, பெருந்திணை. | 1<br>1 | 2 |
| 26. | குளிர்காலம் | 2 | 2 |
| 27. | போல, புரைய, ஒப்ப, உறழ (அல்லது பொருத்தமான நான்கு விடை இருப்பின் மதிப்பெண் வழங்குக) | 2 | 2 |

பிரிவு –III மதிப்பெண்கள்:50

| பகுதி –1 | | | |
|---|---|---|---|
| எவையேனும் இரண்டனுக்கு மட்டும். | | | 2X5 = 10 |
| 28. | 1. ஈற்றடி முச்சீராய் ஏனைய அடிகள் நாற்சீராய் வரும்.<br>2. இயற்சீர், வெண்சீர் வரும். பிற சீர்கள் வாரா.<br>3.இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் வரும். பிற தளைகள் வாரா.<br>4. ஈற்றடியின் ஈற்றுச் சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாடுகளுள் ஒன்று கொண்டு முடியும்.<br>5. செப்பலோசை பெற்று வரும்.<br>6. இரண்டடி முதல் பன்னிரண்டு அடி வரை வரும். | | 5 |

| | | | |
|---|---|---|---|
| 29. | இக்குறட்பாவில் **சொற்பொருள் பின்வரு நிலையணி** பயின்று வந்துள்ளது. | 1 | 5 |
| | **அணி இலக்கணம்**<br>செய்யுளில் முன்னர் வந்த சொல், மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருவது. | 2 | |
| | **விளக்கம்**<br>இப்பாடலில் 'தீய' என்னும் சொல் 'தீமை' என்னும் ஒரே பொருளில் பலமுறை வந்துள்ளது. | 2 | |
| | (அல்லது) | | |
| | **தற்குறிப்பேற்ற அணி** | | |
| | **அணி இலக்கணம்**<br>இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞர் தம் குறிப்பினை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி. | 2 | |
| | **சான்று**<br>ஏற்புடைய சான்று இருப்பின் மதிப்பெண் வழங்குக. | 1 | |
| | **விளக்கம்**<br>ஏற்புடைய விளக்கம் இருப்பின் மதிப்பெண் வழங்குக. | 2 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 30 | **அசை பிரித்தல்** | | | | 5 |
| | **சீர்** | **அசை** | **வாய்பாடு** | | |
| | இல்/லா/ரை | நேர், நேர், நேர் | தேமாங்காய் | 2 | |
| | எல்/லா/ரும் | நேர், நேர், நேர் | தேமாங்காய் | | |
| | எள்/ளுவர் | நேர், நிரை | கூவிளம் | | |
| | செல்/வரை | நேர், நிரை | கூவிளம் | 2 | |
| | எல்/லா/ரும் | நேர், நேர், நேர் | தேமாங்காய் | | |
| | செய்/வர் | நேர், நேர் | தேமா | | |
| | சிறப்/பு | நிரைபு | பிறப்பு | 1 | |

| பகுதி – 2 | | |
|---|---|---|
| எவையேனும் இரண்டனுக்கு மட்டும். | | 2 X 5 = 10 |
| 31. | வினாவிற்கேற்ற விடை இருப்பின் (பத்தி வாரியாக) மதிப்பெண் வழங்கலாம். | |
| 32. | | |
| 33. | குறிப்பு –உட்தலைப்புகளிட்டு எழுதியிருக்க வேண்டும். | |

| பகுதி – 3 | | | |
|---|---|---|---|
| கீழ்க்காணும் பத்தியிலுள்ள ஆங்கிலச் சொற்களுக்குத் தமிழாக்கம் செய்க | | | 3 + 2 = 5 |
| 34. (அ) | இளவரசன், **அம்மா** நான் **வங்கிக்குப்** போய் வருகிறேன் என்று கூறித் தனது **மிதிவண்டியில்** சென்றான். வழியில் **போக்குவரத்து நெரிசல்** ஆனதால் **வங்கியில் வரிசை** அதிகமாக இருந்தது. | 6 x ½ = 3 | 3 |
| (ஆ) | உரிய தமிழ் எண்களை எழுதுக<br>75 – எரு 86– அகு 138– கநஅ 294– உகூச | 4 x ½ = 2 | 2 |

| கீழ்க்காணும் பத்தியிலுள்ள ஆங்கில உரைப்பகுதிக்குத் தமிழாக்கம் செய்க | | 3 + 2 = 5 |
|---|---|---|
| 35. (அ) | உயிருள்ளவை அனைத்திற்கும் உணவு இன்றியமையாததாகும். உணவின்றி மனிதன் நீண்டநாள் உயிர் வாழ முடியாது. ஒவ்வொரு மனிதனும் உயிர்வாழப் போதுமான உணவினை உண்ண வேண்டும். அவன் அந்த அளவை விடக் குறைவான உணவினை உண்டால் உடல்நலம் குன்றி நோயில் வீழ்வான். ஆகையால் ஒவ்வொரு மனிதனும் உயிர்வாழப் போதுமான உணவினை உண்ண வேண்டும்.<br>(தகுந்த மொழிபெயர்ப்பு எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக) | 3 |

| | | | |
|---|---|---|---|
| 35 (ஆ) | கீழ்க்காணும் ஆங்கிலப் பழமொழிகளில் எவையேனும் இரண்டனுக்கு இணையான தமிழ்ப்பழமொழியை எழுதுக.<br>(i) வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்.<br>(ii) காலத்தே கடமையைச் செய்.<br>(iii) அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும்.<br>(iv) வெள்ளம் வருமுன் அணை போட வேண்டும் / வருமுன் காப்பதே சிறப்பு | | 2 |
| 35 | காதுகேளாத மாணவர்களுக்கான மாற்றுவினா<br>1. சுப்புரத்தினம்<br>2. 1891ஆம் ஆண்டு ஏப்ரல் 29ஆம் நாள் புதுவையில் பிறந்தார்<br>3. கனகசபை– இலக்குமி<br>4. குடும்ப விளக்கு, இருண்ட வீடு, தமிழியக்கம், பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு (இவற்றில் ஏதேனும் நான்கு)<br>5. திருச்சிராப்பள்ளி. | 1<br>1<br>1<br>1<br>1 | 5 |

| பகுதி –4 | | | |
|---|---|---|---|
| கீழ்க்காணும்ஒன்றனுக்கு விடையளி | | | 1X5 = 5 |
| 36 (அ) | 1. பொருத்தமான சூழலில் கதையை நிறைவு செய்தல்<br>2. தலைப்பு | 4<br>1 | 5 |
| | (அல்லது) | | |
| (ஆ) | மழை அல்லது நட்பு என்ற தலைப்பில் பொருத்தமான கவிதை எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக. | 5 | |

| பகுதி –5 | | | |
|---|---|---|---|
| 37 | ஏற்புடைய ஐந்து நயங்கள் இருப்பின் மதிப்பெண் வழங்கலாம். | | 1X5 = 5 |

| பகுதி – 6 | | |
|---|---|---|
| 38 | படிவத்தினைப் பூர்த்தி செய்க | 1X5=5 |
| | தொடர்வண்டி முன்பதிவுப் படிவம் | 5 |
| | வண்டியின் பெயர் :**சென்னை – கோவை தொடர்வண்டி** | |
| | பயணதேதி : **25–03–2018** | |
| | வகுப்பு–முதல்/ இரண்டு படுக்கை எண்ணிக்கை–2 | |
| | புறப்படும் இடம் : **சென்னை**–சேருமிடம்–**கோவை** | |
| | ஏறுமிடம்–சென்னை | |

| வ. எண் | பெயர் | பால் ஆ/பெ | வயது | பயணச்சலுகை உரிமை எண் | விருப்பம் |
|---|---|---|---|---|---|
| 1 | **இராணி** | பெ | **35** | – | – |
| 2 | **கோபி** | ஆ | **40** | – | – |

விண்ணப்பதாரரின்பெயர்– **இராணி**
முகவரி–சென்னை
தொலைபேசிஎண்–xxxxxxxxxx

**(இராணி)**
கையொப்பம்

| பகுதி –7 | | | |
|---|---|---|---|
| **கீழ்க்காணும் சூழல் வினாக்களுக்கு விடையளி** | | | **3 +2 = 5** |
| **39 (அ)** | **1. சரி.**<br>**2. நல்ல நண்பர்களுடன்.**<br>**3. மறுத்தல் திறன்.**<br>**(ஏற்புடைய விடைகளிருப்பின் மதிப்பெண் வழங்குக.)** | **1**<br>**1**<br>**1** | **3** |
| **(ஆ)** | **1. திருமணத்தை மறுப்பாள்.**<br>**2. திருமணத்திற்கு இது உரிய வயது அன்று என்று கூறி புரிய வைப்பேன்.**<br>**(ஏற்புடைய விடையிருப்பின் மதிப்பெண் வழங்குக.)** | **1**<br>**1** | **2** |

பிரிவு –IV மதிப்பெண்கள்:20

| பகுதி –1 | | |
|---|---|---|
| ஒன்றனுக்கு மட்டும் | | 1X10 = 10 |
| 40(அ) அனுப்புநர் | 1 | 10 |
| பெறுநர் | 1 | |
| விளித்தல் | 1 | |
| பொருள் | 1 | |
| செய்தி | 3 | |
| இப்படிக்கு | 1 | |
| இடம். நாள் | 1 | |
| உறைமேல்முகவரி | 1 | |
| (அல்லது) | | |
| (ஆ) பாராட்டுக் கடிதம் | | |
| இடம். நாள் | 1 | |
| விளித்தல் | 1 | |
| செய்தி | 6 | |
| இப்படிக்கு | 1 | |
| உறைமேல்முகவரி | 1 | |

| பகுதி –2 | | | |
|---|---|---|---|
| ஒன்றனுக்கு மட்டும் | | | 1X10 = 10 |
| 41 (அ) (ஆ) | தலைப்பு | 1 | 10 |
| | குறிப்புச்சட்டகம் | 1 | |
| | முன்னுரை | 1 | |
| | பொருளுரை | 4 | |
| | மேற்கோள் | 1 | |
| | உள்தலைப்புகள் | 1 | |
| | முடிவுரை | 1 | |

********